### பெண்கள், அமைதி, பாதுகாப்புத் திட்டத்தின் மீதான

# இந்தியாவின் அர்ப்பணிப்பு அசைக்க முடியாததாக உள்ளது!

## ஐ.நா. சபையின் அமைதி நிறுவல் ஆணையக் கூட்டத்தில் பி.வில்சன் எம்.பி. பேச்சு!

நியூயார்க், அக். 31-

“பெண்கள், அமைதி, பாதுகாப்புத் திட்டத்தின் மீதான இந்தியாவின் அர்ப்பணிப்பு அசைக்க முடியாததாக உள்ளது” என்று இந்திய நாடாளுமன்ற மாநிலங்களவை கழக உறுப்பினர் பி.வில்சன் நியூ யார்க்கில் நடைபெற்ற ஐ.நா. சபையின் அமைதி நிறுவல் ஆணையக் கூட்டத்தில் பேசும்போது கூறினார்.

அமெரிக்காவின் நியூயார்க் நகரில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையகத்தில் நடைபெற்ற பெண்கள், அமைதி மற்றும் பாதுகாப்பு குறித்த அமைதி நிறுவல் ஆணையத்தின் தூதர் மட்டக் கூட்டத்தில் பங்கேற்ற இந்தியாவின் நிலைப்பாட்டு அறிக்கை குறித்து மாநிலங்களவை உறுப்பினர், மூத்த வழக்கறிஞர், பி. வில்சன் பேசியதாவது:

பாதுகாப்பு கவுன்சிலின் தீர்மானம் 1325ன் 25ஆம் ஆண்டு நினைவு நாளை ஒட்டி இன்றைய நிகழ்வை ஒருங்கிணைத்ததற்காக, அமைதி நிறுவல் ஆணையத்தின் தலைமை ஜெர்மனிக்கு இந்தியா தனது பாராட்டுகளை தெரிவிக்கின்றது. பெண்கள் சமத்துவத்திற்காக நமீபியா அமைச்சரும், ஐ.நா. மகளிர் அமைப்பின் நிறைவேற்று இயக்குநரும், மற்றும் மற்ற உரையாளர்களும் தங்களது ஆழமான கருத்துகளையும், பெண்கள், அமைதி மற்றும் பாதுகாப்பு (WPS) திட்டத்தை மேலும் வலுப்படுத்த உதவும் மதிப்புமிக்க பங்களிப்பு களையும் வழங்கியதற்காக நன்றி தெரிவிக்கிறோம்.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் அமைதிப்படை நடவடிக்கைகளுக்கான முன்னணி பங்களிப்பாளர்களில் ஒன்றாக இருக்கும் இந்தியா, அமைதியை உருவாக்குவதற்கும் நிலைநிறுத்துவதற்கும் பெண்களின் முழுமையான மற்றும் சமமான பங்கேற்பு இன்றியமையாதது என்பதை வலியுறுத்துகிறது. அமைதிக்காப்பு மற்றும் அமைதிநிறுவல் மீதான எங்கள் அர்ப்பணிப்பு, தேசிய உரிமை மற்றும் பெண்கள், அமைதி மற்றும் பாதுகாப்பு (WPS) நோக்கங்களின் கொள்கைகளுடன் இணை ந்துள்ளது.

**அமைதிக்காப்பு அத்தியாவசிய மானவை!**

இந்தியாவின் அமைதிக்காப்பு பாரம்பரியத்தை தனித்துவமாக ஆக்கும் அம்சம் எங்கள் பங்களிப்பின் அளவில் மட்டும் இல்லை, நிலைத்த



அமைதிக்கான இன்றியமையாத செயற்பாட்டாளர்களாக பெண்களை முன்கூட்டியே அடையாளம் கண்டது என்பதிலும் இருக்கிறது.

பாதுகாப்பு கவுன்சிலின் தீர்மானம் 1325 பிறக்கும்முன்பே, 1960களில் இந்திய பெண் மருத்துவ அதிகாரிகள் காங்கோவில் பணியாற்றினர். இது, ஐ.நா. அமைதிப்படைநடவடிக்கைகளில் பெண்கள் பங்கேற்ற முதன்மையான நிகழ்வுகளில் ஒன்றாகவும் பதிவாகிறது. இது ஒரு குறியீட்டு நடவடிக்கை மட்டுமல்ல; மாறாக, பெண்களின் பார்வை, திறன்கள், மற்றும் அவர்களின் பங்கு பயனுள்ள அமைதிக்காப்பு மற்றும் அமைதி நிறுவலிற்கு அத்தியாவசியமானவை என்பதைக் கண்கூடாக அங்கீகரிக்கிறது.

2007 ஆம் ஆண்டு, இந்தியா ஐ.நா.வின் முதல் முழு பெண்கள் கொண்ட காவல் படை பிரிவை (Formed Police Unit) லைபீரியாவிற்கு அனுப்பியது. இந்த முன்னோடியான முயற்சி, அந்நாட்டின் உள்ளூர் பெண்களை தங்கள் தேசிய காவல் மற்றும் பாதுகாப்பு சேவைகளில் சேர ஊக்குவித்தது. இன்று, இந்திய பெண்கள் அமைதிப்படை வீராங்கனைகள் காங்கோ ஜனநாயகக் குடியரசு, அப்யேய் மற்றும் தென் சூடான் ஆகிய இடங்களில் சிறப்பாக பணியாற்றி வருகின்றனர். அவர்கள் சமூகங்களுடன்நம்பிக்கையைஉருவாக்குவதிலும், பாலின அடிப்படை யிலான வன்முறையைத் தடுக்கவும், பொதுமக்கள் பாதுகாப்பை வலுப்படுத்த வும் முக்கிய பங்கு வகித்து வருகின்ற னர்.

இவ்வாறான பணியமர்வுகளின் மூலம், அமைதிக்காப்பு மற்றும் அமைதிநிறுவலில் பெண்கள் வழங்கும் நேர்மையான பங்களிப்பு மற்றும் தாக்கத்தை இந்தியா வெளிப்படுத்தியுள்ளது. பெண்கள், சமூகங்களில் நம்பிக்கையை உருவாக்கி, குறிப்பாக பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு நம்பிக்கையை அளிக்கின்றனர். மிக முக்கியமாக, அவர்கள் பாலின அடிப்படையிலான வன்முறையை எதிர்கொள்ளவும், அமைதிக்கான வழிமுறைகள் சமூகத்தின் அனைத்து பிரிவுகளின் தேவைகள் மற்றும் பார்வைகளை பிரதிபலிக்கவும் உதவுகின்றனர். அத்துடன், மோதல் நிலப்பரப்புகளில் உள்ள பெண்களுக்கு, அவர்களும் தலைவர்களாகவும், அமைதி நிறுவர்களாகவும் ஆக முடியும் என்பதற்கான உதாரணமாக திகழ்கின்றனர்.

**சமூக ஒற்றுமை ஒன்றிணைந்த ஆட்சி!**

தேசிய அளவில், பெண்கள் முன்னேற்றத்திலிருந்து பெண்கள் தலைமையிலான முன்னேற்றம் என்ற இந்தியாவின் பயணம், எங்கள் சமூகத்தின் ஒவ்வொரு துறையையும் மாற்றியுள்ளது. இன்று, அடிப்படை மட்டத்தில் 14 இலட்சத்திற்கும் மேற்பட்ட பெண்கள் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளாக பணியாற்றுகின்றனர். மேலும், 23க்கும் மேற்பட்ட இந்திய மாநிலங்களும் ஒன்றிய பிரதேசங்களும், உள்ளூராட்சி மன்றங்களில் 50 சதவீத இடங்களை பெண்களுக்கு ஒதுக்கி உள்ளன. இது, சமூக ஒற்றுமை மற்றும் ஒன்றிணைந்த ஆட்சி ஒன்றை ஒன்று பூர்த்தி செய்யும் அம்சங்கள் என்பதை வலியுறுத்துகிறது.

இந்தியா, பெண்களுக்கான திறன் மேம்பாட்டு முயற்சிகளில், குறிப்பாக உலக தெற்கு நாடுகளிலிருந்து வரும் அமைதிப்படைப் பணியாளர்களுக்காக, தொடர்ந்து முதலீடு செய்து வருகிறது. புது டெல்லியில் உள்ள ஐக்கிய நாடுகள் அமைதிக்காப்பு மையம் (Centre for United Nations Peacekeeping), இன்று பாலின உணர்வுமிக்க பயிற்சிகளுக்கான உலகத் தரம் வாய்ந்த மையமாக உருவெடுத்துள்ளது.

அது, பெண்கள் அமைதிப்படை வீராங்கனைகளுக்காக முக்கிய பயிற்சி நிகழ்ச்சிகளை நடத்தி, அவர்களுக்கு இயக்கத்திட்டமிடல், பொதுமக்கள் பாதுகாப்பு, பாலியல் சுரண்டல் மற்றும் வன்முறைத் தடுப்பு, பாலின உணர்வுமிக்க தலைமைத்துவம் போன்ற துறைகளில் அத்தியாவசிய பயிற்சிகளை வழங்குகிறது. இவ்வாண்டின் தொடக்கத்தில், இந்தியா உலக தெற்கு நாடுகளிலிருந்து பெண்கள் அமைதிப்படை வீராங்கனைகளுக்காக நடத்தப்பட்ட முதல் வகையான சர்வதேச மாநாட்டை நடத்தி வரலாறு படைத்தது.

எதிர்காலத்தை நோக்கி நாம் முன்னேறிக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில், பெண்கள், அமைதி மற்றும் பாதுகாப்பு (WPS) திட்டத்தின் மீதான இந்தியாவின் அர்ப்பணிப்பு அசைக்க முடியாததாக உள்ளது. இந்தியா தனது கூட்டு நாடுகளுடன், குறிப்பாக உலக தெற்கு நாடுகளிலுள்ளவர்களுடன், தனது அறிவு, பயிற்சி, மற்றும் தொழில்நுட்பத்தை பகிர்ந்து கொண்டு, பொதுவான சவால்களுக்கு கூட்டாக தீர்வுகளை உருவாக்குவதில் தயாராக உள்ளது.

இவ்வாறு பி.வில்சன் எம்.பி. அவர்கள் பேசினார்.

---

# சென்னை கிழக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதிக் கழகச் செயலாளர்கள், வட்ட கழகச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர்- அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!



சென்னை கிழக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள் ,பகுதிக் கழகச் செயலாளர்கள், வட்ட கழகச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம் இன்று (31/10/2025 - வெள்ளிக்கிழமை) மாலை 4.00 மணியளவில் சென்னை, ஓட்டேரி, ஸ்டாரன்ஸ் சாலை, எம்.கே.டி. மஹாலில் அவைத்தலைவர் கோ.ஏகப்பன் தலைமையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் சென்னை கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட மாநில நிர்வாகிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள்,இந்நாள்-முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள்,தலைமை செயற்குழு உறுப்பினர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள், தொகுதி பார்வையாளர்கள்,பகுதிக் கழகச் செயலாளர்கள்.. ,பொதுக்குழு உறுப்பினர்கள், மண்டலக் குழுத் தலைவர்கள்,மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், வட்ட கழகச் செயலாளர்கள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: கழக ஆக்கப் பணிகள்

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு**
செயலாளர், சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க.

---

### எழும்பூர் சட்டமன்றத் தொகுதி

# 58, 61, 77 வார்டுகளில் வளர்ச்சித் திட்டப் பணிகள்!

## இ.பரந்தாமன் எம்.எல்.ஏ. ஆய்வு செய்து பணிகளை துரிதப்படுத்தினார்!

சென்னை, அக். 31 -

கழகச் சட்டத்துறை இணைச் செயலாளர் வழக்கறிஞர் இ.பரந்தாமன் எம்.எல்.ஏ. வார்டு எண்கள் 58, 61 மற்றும் 77-க்கு உட்பட்ட பகுதிகளில் நடைபெற்று வரும் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

வார்டு எண்.61, மேயர் இராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டு அரங்கத்தில் எதிர்வரும் நவம்பர் 28 அன்று ஆடவர் ஹாக்கி இளையோர் உலகக் கோப்பை-தமிழ்நாடு 2025 போட்டிகள் நடைபெறுவதையொட்டி, அவ்வரங்கத்தில் கழிவுநீர்க் குழாய் இணைப்பு மற்றும் மழைநீர் வடிகால் பராமரிப்பு பணிகள் நடந்து வருவதையும்;

புதுப்பேட்டை, மீர் மதன் அலி தெருவில் கழிவு நீர் வடிகாலைத் தெற்கு கூவம் பகுதியோடு இணைப்பதற்கு ஏற்ப மூன்று இணைப்புக் குழாய்கள் அமைக்க வேண்டியிருந்த நிலையில் இரண்டு குழாய்கள் அமைக்கப்பட்டு, ஒரு குழாய் அமைக்க வேண்டியிருந்தது. சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன் 26.10.2025 அன்று அத்தெருவில் ஆய்வு மேற்கொண்டபோது, மீதமுள்ள இணைப்புக் குழாயை உடனடியாக அமைக்குமாறு சென்னை பெருநகரக் குடிநீர் வழங்கல் வாரிய அதிகாரிகளிடம் அறிவுறுத்தியிருந்தார். அதன்படி, அத்தெருவில் 83 மீட்டர் நீளமுள்ள இணைப்புக் குழாய் அமைக்கும் பணி தொடங்கப்பட்டு, நடந்து வருவதையும்; வார்டு எண்.58, வேப்பேரி E.K.குரு தெருவில் மழைநீர் தேங்காமல் இருப்பதற்காக Catch Bit அமைக்கப்பட்டு வருவதையும்; வார்டு எண்.77, போகிபாளையம், பட்டாளம் மீன் மார்கெட் பின்புறமுள்ள மின் மாற்றியை வேறு இடத்திற்கு மாற்றும் பணியையும்; வார்டு எண்.77, டிமலஸ் சாலையில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி நடந்துவருவதையும்; வார்டு எண்.77, மோதிலால் நேரு தெரு-டிமலஸ் சாலை சந்திப்பில் புதிய கழிவுநீர்க் குழாய் அமைக்கப்படுவதையும்;

வார்டு எண்.77, குமாரசாமிராஜாபுரம்-டிமலஸ் சாலை சந்திப்பில் புதிதாக பிரதான குடிநீர்க் குழாய் பதிக்கப்படுவதையும் பார்வையிட்டு ஆய்வு செய்து, இப்பணிகளை விரைந்து முடிக்குமாறு துறை சார்ந்த அதிகாரிகளிடம் அறிவுறுத்தினார்.

இவ்வாய்வின்போது சென்னை மாநகராட்சி, சென்னைப் பெருநகரக் குடிநீர் வழங்கல் வாரியம், மின் வாரியம் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் உள்ளிட்ட துறைகளைச் சேர்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

மேலும், முன்னாள் வட்டச் செயலாளர் ஆர். புருசோத்தமன், அவைத் தலைவர் வெ.மருதன், மாவட்டப் பிரதிநிதிகள் கமலக்கண்ணன், மா.காந்தி, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் சங்கர் நானா, பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர் சுகுமாறன், அவைத் தலைவர் விசுவநாதன், 58-வது வட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஆஸ்டின், 77-வது வட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் சதிஷ், 77 ‘அ’ வட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் சூர்யா, சென்னைகிழக்கு மாவட்ட மகளிர் தொண்டர் அணி துணை அமைப்பாளர் ஜான்சி ராணி, முன்னாள் அவைத் தலைவர் கி.புஷ்பராஜ், சரவணன், கார்த்திக், கோமகன் உள்ளிட்ட கழக நிர்வாகிகளும், செயல்வீரர்களும் இவ்வாய்வுகளில் கலந்து கொண்டனர்.



கடலூர் மேற்கு மாவட்டம் திட்டக்குடி சட்டமன்ற தொகுதி மங்களூர் கிராமத்தைச் சார்ந்த செந்தில் என்பவர் வயலில் வேலை செய்து கொண்டிருந்த பொழுது விஷ பாம்பு கடித்து மறைவெய்தினார். தகவல் அறிந்ததும் முதலமைச்சர் அவர்கள் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்து முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.3 லட்சம் வழங்கிட உத்தரவிட்டதை தொடர்ந்து உயிரிழந்த செந்திலின் குடும்பத்தினருக்கு முதல்வரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.3 லட்சமும் அமைச்சர் சி.வி.கணேசன் தமது சொந்த நிதியிலிருந்து ரூ. 2 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.5 இலட்சத்தினை வழங்கினார்.

---

### இராயபுரம் மண்டலத்தில்

# அனைத்து வளர்ச்சி திட்டப் பணிகள்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆய்வு!

சென்னை, அக். 31-

முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின் படி, நேற்று (30.10.2025) இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக்குழுமத்தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தலைமையில் துறைமுகம் சட்டமன்றத் தொகுதி, இராயபுரம் மண்டலத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் அனைத்து வளர்ச்சித் திட்டப் பணிகளின் முன்னேற்றங்கள் குறித்தும் மற்றும் வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் குறித்தும் பல்வேறு துறை சார்ந்த அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டம் இராயபுரம் மண்டல அலுவலக கூட்டரங்கில் நடைபெற்றது.

பின்னர், மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்/சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவர் அவர்கள், துறைமுகம் சட்டமன்றத் தொகுதியில் இராயபுரம் மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் சென்னை குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், பெருநகர சென்னை வளர்ச்சிக் குழுமம், மின் சாரத்துறை, நெடுஞ்சாலைத் துறை, பொதுப் பணித்துறை, நீர்வளத் துறை, உள்ளிட்ட பல்வேறு துறைகளின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப் பணிகள் மற்றும் பணி ஒப்பந்தம் கோரப்பட்டு தொடக்க நிலையில் உள்ள பணிகளின் தற்போதைய நிலை குறித்து விரிவாக தொடர்புடைய துறை அலுவலர்களிடம் ஆலோசனை மேற்கொண்டு, அனைத்துப் பணிகளும் வருகின்ற ஜனவரி மாதத்திற்குள் முடித்திட வேண்டும் என அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

மேலும், வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ். மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப் பணிகள், வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைப் பணிகள் மற்றும் பொதுமக்களுக்கு வழங்கப்படும் அரசின் சேவைகள் குறித்தும் தொடர்புடைய துறை அலுவலர்களிடம் விரிவாக ஆய்வு மேற்கொண்ட அமைச்சர் அவர்கள் பொதுமக்கள் அன்றாட பயன்படுத்தக் கூடிய வளர்ச்சித் திட்டப் பணிகளுக்கு முன்னுரிமை அளித்து பணிகளை விரைவில் முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரவேண்டும். வளர்ச்சித் திட்டப்பணிகள் அனைத்தும் ஒப்பந்த காலத்திற்குள் ஒப்பந்தக் காரர்கள் முடித்திட வேண்டும் என அலுவலர்களுக்கு அமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்.

முன்னதாக, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் வார்டு-57க்குட்பட்ட வால்டாக்ஸ் சாலை, வ.உ.சி. தெருவில் ரூ.8.55 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் சமுதாயக் கூடக் கட்டுமானப் பணியினைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இப்பணிகளை உரிய தொழில்நுட்ப வழிகாட்டுதலுடன் தரமாகவும், விரைவாகவும் முடித்து பயன்பாட்டிற்குக் கொண்டுவர அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இந்த ஆய்வின்போது, மேயர் ஆர்.பிரியா, வடக்கு வட்டார துணை ஆணையர் கட்டா ரவி தேஜா, மண்டலக் குழுத் தலைவர் பி.ஸ்ரீராமுலு, மண்டல அலுவலர் விஜய் பாபு, மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

### மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. சார்பில் சீர்காழி, மயிலாடுதுறை, பூம்புகார் தொகுதிகளில்

# வாக்குச்சாவடி முகவர்கள் (BLA - 2) பூத் டிஜிட்டல் ஏஜெண்ட் (BDA) ஆலோசனை மற்றும் பயிற்சி கூட்டம்!

## அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் சிறப்புரை! என்.இளையராஜா - மன்னை த.சோழராஜன் - மு.தினேஷ்குமார் முன்னிலை!

## மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



மயிலாடுதுறை மாவட்டத்திற்குட்பட்ட மயிலாடுதுறை, சீர்காழி, பூம்புகார் ஆகிய மூன்று சட்டமன்றத் தொகுதிகளில் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க வாக்குச்சாவடி முகவர்கள் (BLA-2) பூத் டிஜிட்டல் ஏஜென்ட் (BDA ) ஆலோசனை மற்றும் பயிற்சி கூட்டம் கீழ்க்கண்ட விபரபப்படி அந்தந்த சட்ட மன்ற தொகுதிக்குட்பட்ட இடங்களில் 31.10.2025, 1.11.2025 ஆகிய இரண்டு நாற்கள் கீழ்க்கண்ட நிகழ்ச்சி நிரல்படி நடைபெற உள்ளது. தொகுதியில் நடைபெறும் கூட்டங்களில் அந்தந்த தொகுதி பார்வையாளர்களான என்.இளையராஜா, மன்னைத.சோழராஜன், மு.தினேஷ்குமார் ஆகியோர் முன்னிலையில் நடைபெறும் இந்த கூட்டங்களில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகிறார்.

| நாள் | தொகுதி | இடம் |
|---|---|---|
| 31.10.2025 மாலை 5.00 | பூம்புகார் | பாலாஜி திருமண மண்டபம். நல்லாடை |
| 1.11.2025 காலை 10.00 | சிர்காழி | இந்திரபவன் திருமண மண்டபம் வைத்தீஸ்வரன் கோயில் |
| 1.11.2025 மாலை 5.00 | மயிலாடுதுறை | ஆர்.ஜி.ஆர்.திருமண மண்டபம். நாகங்குடி |

இக்கூட்டத்திற்கு தொகுதி பர்வையாளர்கள், மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், சட்டமன்ற இந்நாள், முன்னாள் உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள் மற்றும் கிளை, வார்டு கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: 1. என் வாக்குச்சாவடி, வெற்றி வாக்குச்சாவடி,
2.SIR (சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்த சீராய்வு) குறித்து.
3. கழக ஆக்கப்பணிகள்.

**நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ.,**
செயலாளர்
மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க.




பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்–X1, 151வது வார்டில் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கும் துறை குறை தீர்ப்பு 151வது வார்டு சிறப்பு கூட்டம் கலைஞர் நூற்றாண்டு நூலகத்தில் சென்னை தெற்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர், 151வது வார்டு மாமன்ற உறுப்பினர் ச.சங்கர் கணேஸ் தலைமையில்,உதவி பொறியாளர் முன்னிலையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் ஏரியா சபை உறுப்பினர்கள், 151வது வார்டிற்கு உட்பட்ட அனைத்து பொது நலசங்க நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டு தங்கள் பகுதியில் உள்ள குறைகள் மற்றும் தேவைகளை எடுத்துரைத்து கடிதம் மூலமாக சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளிடம் மனு அளித்த நிலையில் அனைவரின் கோரிக்கையை விரைவில் நிறைவேற்றுவதாக உறுதியளித்தார்.